**முக்கிய வார்த்தைகள்:**
மனம் / அறிவுத் திறன்
ஆரோக்கியமான / நன்றான.
தீங்கு செய் / சேதம் ஏற்படுத்து
கவனம் செலுத்து

**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**15 மே 2026 / 27 துல்கஃதா ஹிஜிரி 1447**

# <u>சிறந்த அறிவாற்றலும் பொருள்மிக்க வாழ்க்கையும்</u>

ٱلْحَمْدُ لِلَّهِ ٱلَّذِي هَدَانَا لِهَٰذَا وَمَا كُنَّا لِنَهْتَدِيَ لَوْلَا أَنْ هَدَانَا ٱللَّهُ. أَشْهَدُ أَنْ لَا إِلَٰهَ إِلَّا ٱللَّهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. ٱللَّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ، وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ ٱللَّهِ، ٱتَّقُوا ٱللَّهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُونَ.

**ஜும்ரதல் முஃமினீன் ரஹிமகுமுல்லாஹ் [ஓரிறை நம்பிக்கை யாளர்களின் சமுதாயமே அல்லாஹ் உங்களுக்கு அருள் புரிவானாக!]**
அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் அனைத்து கட்டளைகளை நிறைவேற்றுவதன் மூலமாகவும், அல்லாஹ் தடைசெய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து விலகி இருப்பதன் மூலமாகவும் அல்லாஹ்வின் மீதான நமது தக்வா [பக்தியை] பலப்படுத்திக் கொள்வோமாக! இம்மையிலும் மறுமையிலும் மகிழ்ச்சியையும் வெற்றியையும் அடைந்த மக்களில் ஒருவராக நாம் ஆகுவோமாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே!**
அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, மனிதகுலத்துக்கு வழங்கியுள்ள அருட்கொடைகளில் மிகச் சிறந்த அருட்கொடை, "அக்ல்" என்பதாகும்; "அக்ல்" எனும் அரபி வார்த்தையின் பொருள், **அறிவாற்றல்** அல்லது **சிறந்த மனம்** என்பதாகும். அறிவாற்றலின் மூலமாகவே நம்மால் சிந்திக்கவும்,

நன்றாகத் தீர்ப்பளிக்கவும், தீர்மானிக்கவும் முடிகின்றது. தவறான விஷயங்களிலிருந்து நல்லவற்றைப் பிரித்தறியவும் முடிகின்றது. அக்ல் எனும் **அறிவுத்திறன்**, மனிதர்களான நம்மை அல்லாஹ்வின் மற்ற படைப்புகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றதல்லவா?

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, திருக்குர்ஆனின் "அல்-அன்ஃபால்" எனும் அத்தியாயத்தின் 22-வது வசனத்தில் கூறுகிறான்:

إِنَّ شَرَّ ٱلدَّوَآبِّ عِندَ ٱللَّهِ ٱلصُّمُّ ٱلۡبُكۡمُ ٱلَّذِينَ لَا يَعۡقِلُونَ ﴿٢٢﴾

பொருள்: "நிச்சயமாக அல்லாஹ்வின் பார்வையில் உயிரினங்களில் மிக மோசமானவர்கள் [உண்மையை] கேட்காதவர்களும் அதனைப் பேசாதவர்களும் ஆவர்; உண்மையை அறிந்து கொள்வதற்காக தமது **அறிவுத்திறனைப்** பயன்படுத்திக் கொள்ளாதவர்களும் ஆவர்"

மனித வாழ்க்கையில் **அறிவாற்றல்** என்பது முக்கியப் பங்காற்றுகின்றது என அறிஞர்களும் கூறியுள்ளார்கள். இமாம் இப்னு ஆஷூர் [ரஹ்] அவர்கள் தனது "மகாஸிதுஷ் ஷரீஆ அல்-இஸ்லாமியா" எனும் நூலில் குறிப்பிடுகையில் :

الْإِنْسَانُ عَقْلٌ تَخْدِمُهُ الْأَعْضَاءُ

பொருள்: "மனிதன், அவனது **அறிவாற்றல்** மூலமாக அளவிடப்பட்டு, வரையறுக்கப்படுகின்றான்; அவனது உறுப்புகளோ அவனது அறிவாற்றலுக்குச் சேவை செய்வதாக இருக்கின்றன" எனத் தெரிவித்துள்ளார்கள்.

இதன் பொருள் யாதெனில், **அறிவாற்றல்** தான், ஒருவரது வாழ்க்கையில் தீர்ப்பளிக்கின்ற, தீர்மானிக்கின்ற முக்கியப் பங்கை ஆற்றுகின்றது; உடம்பின்

மற்ற உறுப்புகளோ **அறிவாற்றல்** எடுக்கும் முடிவை ஏற்று, அதற்குத் தக்க செயல்படுபவையாக உள்ளன என்பதாகும்.

ஒருவரது வாழ்க்கையின் **நலமாகிறது**, அவரது **மனது மற்றும் அறிவுத்திறனின் நலத்துடன்** நெருக்கமானத் தொடர்புடையதாகவும், அதனுடன் இணைந்ததாகவும் உள்ளது. **அறிவாற்றல்** நன்றாக வளர்க்கப்பட்டு, பாதுகாக்கப்படும் போது, வாழ்க்கை மிகச் சிறப்பாக வழிகாட்டப்பட்டதாகவும் பொருள்மிக்கதாகவும் ஆகின்றது.

எனவே தான், **அறிவாற்றல்** பாதுகாக்கப்படுவதற்கும், மார்க்க வழிகாட்டுதலை அடிப்படையாகக் கொண்டு சிந்திப்பதற்கான, மதிப்பீடு செய்வதற்கான ஆற்றலை வளர்த்துக் கொள்வதற்கும் இஸ்லாம் மிகுந்த முக்கியத்துவமளிக்கின்றது. இஸ்லாமிய ஷரீஅத், அல்லாஹ்வுடனான நமது உறவை மட்டும் வளர்க்கவில்லை; மாறாக, அத்துடன், **சிறப்பாகச்** சிந்திப்பதன் மூலமும் அறிவுப்பூர்வமாகத் தீர்மானிப்பதன் மூலமாகவும் பொருள்மிக்க வாழ்க்கையை உருவாக்குவதற்கும் நமக்கு வழிகாட்டுகிறது.

**எனது அன்பிற்குரிய சகோதரர்களே**!

இன்று, நமது **அறிவாற்றலின் நலனைப்** பாதுகாத்துக் கொள்வதற்கு எதிராக பல சவால்கள் ஏற்பட்டுள்ளன. உதாரணமாக, போதைப் பொருட்களைப் பயன்படுத்துதல், நவீன எலக்ட்ரானிக் [மின்னணுப்] புகைப்பிடித்தல், மது அருந்துதல் ஆகியவற்றின் **எதிர்விளைவுகள்** என்ன என்பது அனைவருக்கும் தெளிவான விஷயமாகும். இவையெல்லாம், மனிதனின் **அறிவாற்றலுக்கும்** தீர்மானிக்கும் திறனுக்கும் பாதிப்பை ஏற்படுத்துவதோடு, தனிநபர்கள், குடும்பங்கள் மற்றும் ஒட்டுமொத்த சமுதாயத்தின் எதிர்காலத்துக்கு ஆபத்தையும் **சேதத்தையும்** ஏற்படுத்துகின்றன.

இக்காலத்தில், சில நுண்ணியத் **தீங்குகளும்** உருவாகியுள்ளன; அவை நமது அன்றாட வாழ்க்கையில் அமைதியாக நுழைந்து, இயல்பானவையாகக் காட்சியளிக்கத் தொடங்குகின்றன. இதற்கு உதாரணமாக, அளவுக்கு

அதிகமான ”ஸ்மார்ட் போன்” களின் பயன்பாட்டை எடுத்துக் கொள்ளலாம். இவை, ஒருவரை, ஓரிறை நம்பிக்கையாகிய ஈமானின் நேர்வழியிலிருந்து வழி தவறச் செய்வதோடு, பாவமான, பொருத்தமற்ற விஷயங்களை படிப்படியாக அவருக்குச் சுகம் தருபவையாக ஆக்குகின்றன; அதன் காரணமாக, அவர் பாவத்தின் விஷயத்தில் குறைந்த உணர்வுடையவராக ஆகி விடுகின்றார். இறுதியில் வாழ்க்கையில் அவற்றைச் சாதாரண, இயல்பான விஷயங்களாகக் கருத முற்படுகிறார். இது போன்ற பழக்கங்கள் கவனிக்கப்படாமல் விடப்பட்டால், அது ஒருவரது அறிவாற்றலின் நலனைப் பலவீனப்படுத்தி விடும்; அவரது பார்வை, **சிந்தித்தல்**, உணர்வுசார் **நலன்கள்**, வாழ்க்கையில் சமநிலை ஆகிய அனைத்தையும் பாதித்து விடும்.

பொழுதுபோக்காகவும் எதார்த்தத்திலிருந்து தற்காலிகமாக விலகுதல் ஆகியவற்றிலிருந்தும் ஆரம்பிக்கப்படும் சில விஷயங்கள் படிப்படியாக போதைப் பழக்கத்துக்கு அடிமையாக்குகின்றன. அவை சரிசெய்யப்படாமல் விடப்பட்டால் நமது கவனத்தைச் சிதைத்து, அழித்து விடுவதோடு, குடும்ப உறவுகளையும் முறித்து விடும். அல்லாஹ் மற்றும் நம்மைச் சுற்றி வாழும் மக்களுக்கு நாம் நிறைவேற்ற வேண்டிய கடமைகளிலிருந்து நம்மைத் திசை திருப்பி விடும்.

**எனது அன்பிற்குரிய சகோதரர்களே!**

இஸ்லாம், **அறிவாற்றலைப்** பாதுகாப்பதற்கு மிகுந்த முக்கியத்துவமளித்துள்ளது. சீராகச் சிந்திப்பதற்கும், **சிறப்பாகத்** தீர்மானிப்பதற்கும் தீர்ப்பளிப்பதற்குமான நமது ஆற்றலைப் பாதிக்கும் அனைத்து விஷயங்களையும், நமது **நலமான வாழ்க்கைக்குத் தீங்கை** ஏற்படுத்தும் விஷயங்களையும் உறுதியாகத் தடை செய்கின்றது.

இறைத்தூதர்[ஸல்] அவர்கள் நவின்றுள்ளார்கள்:

”**தீங்கிழைக்கவும்** கூடாது; **தீங்கிற்குத்** தீங்கால் பதிலளிக்கவும் கூடாது” [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் தாரகுத்னீ ரஹ்]

தற்போது கூறப்பட்ட ஹதீதானது, ஒருவர், தனக்கோ அல்லது சமுதாயத்துக்கோ எந்த வகையிலும் தீங்கிழைக்கக் கூடாது எனவும், **அறிவாற்றலுக்கும்**, தெளிவாகச் சிந்திப்பதற்குமான ஆற்றலுக்கும் **பாதிப்பை** ஏற்படுத்தும் எவ்விஷயத்தையும் செய்வது கூடாது எனவும் இஸ்லாம் கூறுவதைச் சுட்டிக் காட்டுகின்றது.

**அறிவாற்றலை**, "மகாஸிதுஷ் ஷரீ ஆ" எனப்படும் ஷரீ அத்தின் உயர்ந்த நோக்கங்களுக்கு இணங்க பாதுகாப்பதற்கு பின்வரும் பல முயற்சிகளை நாம் செய்ய வேண்டியதுள்ளது:

**முதலாவதாக: எந்தப் பொருள்களும், பழக்கங்களும் மனதுக்கும் அறிவாற்றலுக்கும் தீங்கை ஏற்படுத்துமோ அவற்றைத் தவிர்ப்பது**
மதுபானங்களை இஸ்லாம் தடைசெய்துள்ளதன் மூலம், போதை தரக் கூடிய, சிறந்த, **விவேகமானத் தீர்மானத்துக்கும்** தீர்ப்புக்கும் பாதிப்பை ஏற்படுத்துகின்ற, மனித **அறிவுத்திறனுக்குத் தீங்கிழைக்கின்ற** ஒவ்வொரு பொருளையும் இஸ்லாம் தடைசெய்கின்றது.

இறைத்தூதர்[ஸல்] அவர்கள் நவின்றுள்ளார்கள்:
"போதை தரும் ஒவ்வொரு பொருளும் தடைசெய்யப்பட்டதாகும்" [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் முஸ்லிம் ரஹ்]

எனவே, இறைத்தூதர்[ஸல்] அவர்கள் மதுபானங்களை மட்டும் தடைசெய்யவில்லை, மாறாக, அத்துடன், தெளிவாகச் சிந்திக்கக் கூடிய ஆற்றலை விட்டும் **மனதைத்** தடைசெய்கின்ற, **சிறந்த** தீர்மானம் எடுக்கும் ஆற்றலைத் தடைசெய்கின்ற அனைத்தையும் தடைசெய்துள்ளார்கள். இவற்றில் போதைப் பொருள் போன்ற **அறிவாற்றலின் நலத்துக்குப்** பாதிப்பை ஏற்படுத்துகின்ற **தீய பழக்க, வழக்கங்கள்**, அன்றாட வாழ்க்கையில் **தெளிவாகக் கவனம்** செலுத்துவதற்குத் தடையாக உள்ள பழக்கங்கள், உதாரணமாக கட்டுப்பாடில்லாத "ஸ்மார்ட் போன்" களின் பயன்பாடுகள் ஆகிய அனைத்தும் அடங்கும்.

**இரண்டாவதாக: கல்வியறிவு, சிறந்த மதிப்பீடுகள் மற்றும் ஆரோக்கியமான செயல்கள் ஆகியவற்றின் மூலம் மனதையும் அறிவுத்திறனையும் பலப்படுத்துதல்**

ஒரு ஆரோக்கியமான **அறிவாற்றல்** தீங்கிலிருந்து பாதுகாக்கப்பட்டதாக மட்டும் இருப்பது கூடாது; மாறாக, அத்துடன், கல்வியறிவு மற்றும் **சிறப்பாகச்** சிந்தித்தல் ஆகியவற்றின் மூலம் பலப்படுத்தப்பட்டதாகவும் இருக்க வேண்டும். தற்கால உலகில் பல்வேறு திசைகளிலிருந்து எண்ணற்ற தகவல்களைத் தொடர்ந்து தெரிந்து வருகிறோம். எனவே, அச்செய்திகளை நாம் அறிவுப்பூர்வமாக மதிப்பீடு செய்யும் ஆற்றலைப் பெற்றிருப்பதும், அவற்றில் எவை நம்பத்தகுந்த அறிவு மூலங்கள் என அடையாளம் காண்பதும் அவசியமாகும்.

**அறிவாற்றலின் நலனைப்** பாதுகாப்பதற்கு, படித்தல், கல்வியைத் தேடுதல், ஆய்வு செய்தல், பயனுள்ள செயல்களின் மூலம் **சிந்தனைக்குப்** பயிற்சியளித்தல் ஆகிய **ஆரோக்கியமானப்** பழக்கங்களை நம்மில் நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். தொழில் நுட்பத்தை அறிவுப்பூர்வமாகப் பயன்படுத்துவோமாக; அவ்வாறு செய்தால், நமது வாழ்க்கை வளமிக்கதாக ஆகுவதற்கும், நமது சிறப்பாகச் **சிந்திக்கும் ஆற்றலும்** உள்ளத்தின் அமைதியும் பலஹீனமானவையாக ஆகாமலிருப்பதற்கும், அது உதவியாக இருக்கும்.

**அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே**!

உண்மையில், **அறிவாற்றலைப்** பாதுகாக்க வேண்டுமென்பதன் பொருள், **தீங்கு** தரும் விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்ள வேண்டும் என்பது மட்டுமல்ல, கல்வியறிவு, ஞானம் மற்றும் அமைதியால் நிரப்பப்பட்ட வாழ்க்கையை உருவாக்க வேண்டுமென்பதும் அதன் பொருளாகும். ஒரு சிறந்த அறிவாற்றல் தனிநபர்களைச் சிறப்பாக வளர்க்கக் கூடியதாகும். அந்நிலையில், அந்த தனிநபர், அறிவுப்பூர்வமாக முடிவெடுப்பதற்கும் சமுதாயத்துக்கு ஆக்கப்பூர்வமாகப் பங்காற்றுவதற்கும், அதிகப் பொருளுடன் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவை நெருங்கு வதற்குமான ஆற்றலைப் பெறுவார்.

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, நம்மிடம் அமானிதமாக ஒப்படைக்கப்பட்டுள்ள **அறிவாற்றல்** எனும் அருட்கொடையைப் பாதுகாப்பதற்கு, ஆற்றலையும் வழிகாட்டுதலையும் நமக்கு வழங்குவானாக. அதன் மூலம் நாம், நமக்கும் நமது குடும்பத்தார்களுக்கும் நமது சமுதாயத்துக்கும் பொருள்மிக்க வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் வாய்ப்பைப் பெறுவோமாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوْهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم.**

## இரண்டாவது பிரசங்கம்

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ الله، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَالَ فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيٍّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلْمُؤْمِنِينَ وَالْمُؤْمِنَاتِ، وَالْمُسْلِمِينَ وَالْمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنْهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالحَرْبَ وَالاِعْتِدَاءَ. اللَّهُمَّ انْصُرْ إِخْوَانَنَا الْمُسْتَضْعَفِينَ فِي غَزَّةَ وَفِي فِلَسْطِينَ، وَفِي كُلِّ مَكَانٍ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ. اللَّهُمَّ بَدِّلْ خَوْفَهُمْ أَمْنًا، وَحُزْنَهُمْ فَرَحًا، وَهَمَّهُمْ فَرَجًا، وَاكْتُبِ السِّلْمَ

وَالسَّلاَمِ وَالأَمْنَ وَالأَمانَ لِلْعالَمِ كُلِّهِ وَلِلنّاسِ أَجْمَعِين. رَبَّنا آتِنا فِي الدُّنيا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنا عَذابَ النّار.

عِبادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسانِ وَإِيتاءِ ذِي الْقُرْبى، وَيَنْهى عَنِ الفَحْشاءِ وَالمُنكرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذْكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضْلِهِ يُعْطِكُم، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ ما تَصْنَعُونَ.